**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

முன்னிலை - திருமதி. செ. மகாலட்சுமி, பி.ஏ., எம்.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, வந்தவாசி .

<u>(திருவள்ளுவர் ஆண்டு 2057, விஸ்வாவசு வருடம், மாசி திங்கள் 28ம் நாள்)</u>

<u>2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் வியாழக் கிழமை</u>

**<u>அசல் வழக்கு எண்.12/2021</u>**

**<u>CNR No.TNTM16-000012-2021</u>**

செல்வபிரபு .... வாதி.

/ எதிர் /

கோவிந்தசாமி ....பிரதிவாதி.

இந்த அசல் வழக்கு இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். ஐசக் நியுட்டன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு ஜே. நேதாஜி அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கை வலியுறுத்தவில்லை என குறிப்பாணை தாக்கல் செய்ததை ஏற்று, இது குறித்து இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

தாவா ஆ அட்டவனை சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது வாதிக்கு உரிமையானது என விளம்புகை செய்து உத்தரவிடக்கோரியும், தாவா ஆ அட்டவனை சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதியினால் ஆக்ரமனம் செய்யப்பட்டுள்ள பகுதியில் கட்டப்பட்டுள்ள சுவற்றினை இடித்து அப்புறப்படுத்தி வாதியின் வசம் ஆ அட்டவனை சொத்தை காலியாக சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்கக் கோரியும், தாவா செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதி கட்டிக் கொடுக்க வேண்டுமென இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**Plaintiff filed memo stating that, he is not willing to proceed this case, Hence the Plaintiff prays to not press his**

**case. Memo recorded. Hence this suit is dismissed as not pressed.**

2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் நாள் இந்நீதிமன்றத்தின் அவையறிய என்னால் பகரப்பட்டது.

ஒம்/- செ. மகாலட்சுமி
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.